






# ஆசார்யர்களின்
# க்ரந்த முத்துக்கள்

தொகுத்தளிப்பவர் : ஸ்ரீ ப ரா வி

மலர் 1 இதழ் 33 13.08.2025

# ஸ்ரீமதே வராஹ மஹாதேசிகாய நம:





***ஆண்டவன் ஸ்ரீ வராஹமஹாதேசிகன், இந்த வருடம், சா துர்மாஸ்ய விரதம் திருப்புல்லாணியில் கடைப்பிடிக்கிறார்.***

# உள்ளே....

## படித்து பின்பற்ற வேண்டிய
## முத்துக்கள்
## உபதேசங்கள்



# முத்துக்கள்

## தண்ணீர்பள்ளி க்ருஷ்ணன்

பெருமாளுக்கு துளஸி ஸமர்ப்பிப்பது ஒரு உன்னதமான அநுக்ஞா கைங்கர்யம், ஆனால், துளஸி க்ரஹிப்பதற்கு (பரிப்பதற்கு) சாஸ்த்ர விதிமுறைகள் உண்டு. ஸ்நாநம் செய்து மந்த்ர உபதேசம் பெற்ற மந்த்ரத்தை உச்சரித்து, உரிய தினங்களில் (வெள்ளி, செவ்வாய், ஞாயிறு, பித்ரு தினங்கள், வ்ரத தினங்களை தவிர்த்து) துளஸியை க்ரஹிக்க வேண்டும்.

கடைகளில் துளஸி வாங்கி பெருமாளுக்கு ஸமர்ப்பிக்க கூடாது ஏன் எனில் துளஸி க்ரஹித்த முறையை உறுதி செய்து கொள்ள முடியாதபடியால் - புஷ்பங்களை ஸமர்ப்பிக்க இந்த விதிமுறைகள் கிடையாது.

ஒரு சரணாகதன், ஸர்வேஸ்வரனான ஸ்ரீமந் நாராயணனிடம் தன் பொறுப்பை ஒப்படைத்து, பூர்வ ஜன்ம பாபங்களை களைந்து, ஒரு வகையாலே முக்தனைப் போல் ஆகி எம்பெருமானின் திரு எண்ணங்களை நேராக அறியமுடியாதவனாக இருப்பதால், இங்குள்ள காலம், தர்ம சாஸ்த்ரப் படி தன் கடமைகளைச் செய்ய வேண்டும். தவறும் போது, இங்குள்ள காலம் பல வித தீங்குகள் ஏற்படும் என்பதை உணர வேண்டும். ஆகையால் சாஸ்த்ரம் கூறும் வழியை மோக்ஷம் பெறும் வரை அவன் பின்பற்ற வேண்டும்.

சரீர தாரணத்திற்காக உண்பது, தூங்குவது, சரீரத்திற்கு உண்டாகும் பய ஹேதுக்களைக் கண்டு அஞ்சுவது, இன வ்ருத்தி செய்வது அனைத்தும் மிருகங்களுக்கும் மனிதனுக்கும் பொதுவான செயல்கள் ; பிறவிப் பயனை உணர ஞான சம்பாத்யம் ஸாத்யமாக மனிதனுக்கு உள்ள போதும், அதை விடுத்து வாழ்பவன் மிருகங்களுக்கு ஒப்பானவனே.

பர தத்வ, பரம ஹித, பரம புருஷார்த்த ஞானமுடையவர்கள், பிறரால் இரக்கப் பட தகாத மேல் மாடியில் உள்ள அதிகாரி. ஞானமற்ற மனிதர்களாக, கீழே காண்பவனை, மிக அற்பர்களாக காண்கின்றனர்.

நாயின் வால் மறைக்க வேண்டிய பாகத்தையும் மறைப்பதில்லை; ஈ கொசுக்களை ஓட்டுகிறதுமில்லை. அது போல, அநுஷ்டானமற்ற ஞானம் ப்ரயோஜனமாகாது. ஆக, நம் ஸத் ஸம்ப்ரதாயத்தில், தெளிவான ஞானமும், அதற்குத் தகுந்த அநுஷ்டானமும் அத்யாவசியம் எனப்படுகிறது.

எம்பெருமானின் திருவாக்குப் படி, 'வேதாந்தங்களும், ஸ்ம்ருதிகளும் என் கட்டளைகளாகும்; அவற்றை மீறி நடப்பவர்கள் யாராக இருப்பினும் எனது ஆணைகளை மீறுபவன் ஆவான்; அவன் என்னிடத்தில் மிகுந்த பக்தி கொண்டிருந்தாலும் அவன் வைஷ்ணவன் அல்லன்' - என்கிறான் ஸர்வேஸ்வரன்.

சாஸ்த்ரீயமான அநுஷ்டானங்கள் இரு வகைகள்.

ஆக்ஞா அநுக்ஞா விபாகேந த்விதா சாஸ்த்ரீய பத்ததி: நிக்ரஹ அநுதயாய ஆத்யா பரா தத் தத் பல ஆப்தயே

அதாவது, சாஸ்த்ரங்களில் கூறப்ப ட விதிமுறைகள் ஆக்ஞை (செய்தே தீர வேண்டும்) மற்றும் அநுக்ஞை (செய்தால் பலன் விளையும்) என்று இரு வகைப்படும் -ஆக்ஞை என்பது எம்பெருமானின் தண்டனையிலிருந்து தப்புவதற்கும் - அநுக்ஞை என்பது அந்தந்த பலனை பெறுவதர்க்கும் வழி வகுக்கும். சரணாகதன் செய்யும் அநுக்ஞா கைங்கர்யத்தின் பலன் ஸர்வேஸ்வரனின் உகப்பே ஆகும்.

அந்தர்மாயாமியாக அனைவரின் ஹ்ருதயத்தில் இருக்கும் எம்பெருமான் திருவுள்ளத்துக்கு உகந்ததை செய்து போவதால், பாபத்தை தொலைக்க கங்கைக்கும் போக வேண்டாம். குருக்ஷேத்ரத்துக்கும் போக வேண்டாம்.

அஹிர் புத்ந்ய ஸம்ஹிதையில்,

பக்த்யா பரமயா வாபி ப்ரபத்யாவா மஹாமதே. ப்ராப்யோஹம் ந அந்யதா ப்ராப்ய: மம கைங்கர்ய லிப்ஸுபி:

என்று ஸ்ரீயப்பதியான எம்பெருமான் தானே மிகத் தெளிவாக அருளிச் செய்துள்ளபடி பரமபதத்தில் என்னை அடைந்து எனக்கு கைங்கர்யம் செய்ய விரும்புவர்கள் பக்தி யோகத்தை செய்தாவது அல்லது சரணாகதியை அநுஷ்டித்தாவது என்னை அடைய வேண்டும். இந்த இரண்டு வழிகளை தவிர வேறு வழியால் என்னை அடைய முடியாது.

பக்தி ப்ரபத்தி நேரிடை மோக்ஷ காரணமாக ப்ரமாணங்கள் வலியுறுத்த, மற்ற உபாயங்கள் பரம்பரையாக மோக்ஷ ஸாதனம் ஆவதை ப்ரமாணங்கள் கூறுகின்றன :

புனித நதி நீராட்டம் மோக்ஷ ஸாதனம் ;

க்ஷேத்ர வாஸம் மோக்ஷ ஸாதனம் ;

பகவத் அவதார சிந்தனம் மோக்ஷ ஸாதனம் ;

பகவந் நாம உச்சாரணம் மோக்ஷ ஸாதனம் -

இவை அனைத்தும் பரம்பரையாக மோக்ஷ ஸாதனம் என்பது பூர்வர்கள் நிர்வாகம் ; அப்படிப் பட்ட நிர்வாஹத்ததால் பக்தி ப்ரபத்தி மட்டுமே மோக்ஷ ஸாதனம் என்னும் ப்ராமணங்களோடே விரோதிக்காமல் இருக்கும் - பரம்பரையாக ஏற்படும் மோக்ஷ உபாயமானது, அந்த ஸுக்ருதம் பலனளிக்கும் வேளையில், ஓர் ஸதாசார்ய சேர்க்கைக்கு காரணமாகிறது. அதனால் மோக்ஷ உபாய அநுஷ்டானம் ஸித்தித்து, மோக்ஷ பலன் கை கூடுகிறது, என்பது ப்ரமாண விளக்கம் .

சேதன அசேதனங்களின் இருப்பு, வாழ்வு மற்றும் செயல்கள் ஈஸ்வர ஸங்கல்பத்துக்கு வசப்பட்டவை; அதாவது, ஸங்கல்ப அதீனம் ; இதனால் ஸர்வேஸ்வரன் நியந்தா என்றும் சேத அசேதன வஸ்துக்கள் நியாம்யம் என்றும் தெளிவு.

ஸகல சேதன அசேதன வஸ்துக்களும் ஈஸ்வரனுடைய ப்ரயோஜனத்தையே ப்ரதானமாகக் கொண்டது; இதனால் ஸர்வேஸ்வரன் சேஷி என்றும் சேத அசேதன வஸ்துக்கள் சேஷம் என்றும் தெளிவு.

எவனிடமிருந்து இந்த லோகங்கள் உண்டாகிறதோ, எவனால் அவை காக்கப் படுகிறதோ, எவனிடத்தில் அவை லயத்தை அடைகிறதோ அவனே ஸர்வேஸ்வரன்.

அதாவது, உலகம் எவனிடம் இருந்து உண்டாகிறதோ அவனே சித் அசித்களோடு கூடிய பரம் பொருள். (ஸர்வேஸ்வரன், பரமாத்மா) - ப்ருஹ்மத்தின் சரீரமாக இருக்கும் சேதனம் மற்றும் அசேதனம், அதாவது மூலப் ப்ரக்ருதி மற்றம் சம்சாரி சேதனர்கள், இவ்வுலகமாகவும் ப்ராக்ருத சரீர சம்பந்ததோடு கூடிய சேதனர்களாகவும் விரிவடைகிறது. - ப்ருஹதாரண்யக உபநிஷத்தில் அந்தர்யாமி ப்ராஹ்மணத்தில்.

(விரிவான அர்த்தங்களுக்கும் பிரமாணங்களுக்கும் தண்ணீர்பள்ளி க்ருஷ்ணன் ஸ்வாமியின் **DGVM** சீரிஸ் படிக்கவும்)